TVR

Register Number

முதல் இடைப் பருவத் தேர்வு - 2018

வகுப்பு : 11 | வரலாறு | மதிப்பெண்கள் : 45 | காலம் : 1.15 மணி

பிரிவு - I

I. குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து எழுதவும். 10x1=10

1. மனித இனத்தின் மூதாதையர் முதலில் தோன்றிய பகுதி
அ) ஆசியா ஆ) ஆப்ரிக்கா இ) அமெரிக்கா ஈ) அண்டார்டிகா

2. சிந்து நாகரிகம் ஏறத்தாழ ---------- லிருந்து வீழ்ச்சி அடைந்தது
அ) பொ.ஆ.மு.1800 ஆ) பொ.ஆ.மு.1900 இ) பொ.ஆ.மு.1950 ஈ) பொ.ஆ.மு.1955

3. ஜெண்ட் அவெஸ்தா எனப்படும் பாரசீக ஈரானிய நூல் ---------- மதத்தை சேர்ந்த நூலாகும்
அ) இந்து ஆ) சமணம் இ) ஜொராஸ்டிரியம் ஈ) முஸ்லிம்

4. ஆதிச்சநல்லூர் ---------- மாவட்டத்தில் அமைந்துள்ளது
அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

5. மகாவீரர் பிறந்த இடம்
அ) விச்சாவி ஆ) பாடலிபுத்திரம் இ) கோசலம் ஈ) குந்தகிராமம்

6. ---------- வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

7. பௌத்த இலக்கியங்கள் ---------- மொழியில் தொகுக்கப்பட்டன
அ) தமிழ் ஆ) சமஸ்கிருதம் இ) ஹிந்தி ஈ) பாலி

8. மெகஸ்தனிஸ் எழுதிய ---------- சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது
அ) இண்டிகா ஆ) முத்ராராட்சசம் இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

9. -------- நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்
அ) அர்த்த சாஸ்திரம் ஆ) இண்டிகா இ) இராஜதரங்கனி ஈ) முத்ராராட்சசம்

10. அலெக்சாண்டர் தாய்நாடு திரும்பும் வழியில் உடல்நல குறைவு காரணமாக ----------ல் இறந்தார்
அ) தட்சசீலம் ஆ) பாபிலோன் இ) ஹைதாஸ்பஸ் ஈ) பஞ்சாப்

பிரிவு - II II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 16க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 4x2=8

11. பெருங்குளம் : சிறு குறிப்பு வரைக.
12. தேரி என்றால் என்ன?
13. வேத கால இலக்கியங்கள் வகைப்படுத்தவும்.
14. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் பற்றி சிறு குறிப்பு வரைக.
15. திரிரத்தினம் என்றால் என்ன?
16. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?

பிரிவு - III III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 4x3=12

17. அச்சூலியன், சோஹானியப் பயன்பாடுகளின் கருவிச் செயல்பாடுகள் குறித்து எழுதுக.
18. தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் காண்க.
19. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவரும் நகரப் பண்புகளைக் கூறுக.
20. அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்தியாவில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது.
21. பதினாறு மகாஜனபதங்கள் யாவை?
22. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.

பிரிவு - IV IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3x5=15

23. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக. (அல்லது)
கற்கால வாழ்க்கை முதல் சிந்து நாகரிகம் வரை காலத்தை புரிந்து கொள்ள எது உதவுகிறது?
24. இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டப் பண்பாடுகளைப் பற்றி விவரி. (அல்லது)
தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டன என்பது பற்றி விளக்குக.
25. புத்தரின் எண்வழிப்பாதையை விவரி. (அல்லது)
அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றி கூறுக.

திருவாரூர் மாவட்டம்